# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.102/2018

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 21.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.இளங்கோவன் (PW–1) | வயது | : | 60 /2025 |
| க/த பெயர் | : | திரு. ராமச்சந்திரன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | பரவாக்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) எனது தகப்பனார் எந்த வருடம் உயில் எழுதி கொடுத்தார் என்றால் 2016 இல் எழுதி கொடுத்தார். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 2019 இல் இறந்தார். எனது தகப்பனார் 2019 இல் இறந்தபின்னர் அவர் எழுதிய உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டதா என்றால் இல்லை, 1/5 பாகவீதம் எனது கட்டுப்பாட்டில் இருந்தது. மீதமுள்ள 4/5 பாகம் யார் கட்டுப்பாட்டில் இருந்தது என்றால் பிரிக்கப்படாமல் உள்ளது. என்வசம் உள்ள 1/5 பாகவீதம் சொத்துக்களானது பாகம் பிரிக்கப்பட்டதன் அடிப்படையில் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை.
2) எனது கட்டுப்பாட்டில் உள்ள 1/5 பாகவீதத்திற்கு நான்கெல்லை என்னவென்றால் என்நிலத்திற்கு கிழக்கு, ராமசந்திரன் இடத்திற்கு மேற்கு, சுசிலா, அறிவழகன் இடத்திற்கு தெற்கு, தவமணி, ராஜன் நிலத்திற்கு வடக்கு. மேலே கண்ட நான்கெல்லையானது எனது அப்பா எனக்கு செட்டில்மெண்ட் மூலம் எழுதி கொடுத்த 17 செண்ட் நிலத்திற்கான நான்கெல்லை என்றால் சரியல்ல.
3) எனது அப்பாவின் உயில் படி சொத்துக்கள் பிரிக்கவில்லை என்பதுதான் எனது கட்சி என்றால் சரிதான். எனது அப்பா யாருக்கு

உயில் எழுதி வைத்தார் என்றால் 2013 இல் எனது மகன் கலைவாணனுக்கு எழுதி வைத்தார், வேறு ஒரு உயில் 2005 இல் எழுதப்பட்டதாக தற்போது தான் தெரியவந்தது. நான் எந்தவித உயிலும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1/5 பாகவீதமும், தாவா சொத்திற்கு செல்வதற்கு பாதை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4) பொதுப்பாதை என்று எந்த பகுதியை கேட்கிறேன் என்றால் நானும் பிரதிவாதிகளும் செல்ல வேண்டி சர்வே எண்.669/3ஏ வில் பாதை கேட்கிறேன். எனது அப்பாவிற்கு சர்வே எண்.669/3 இல் எவ்வளவு சொத்து உள்ளது என்றால் எனக்கு எழுதி கொடுத்ததுபோக 155 குழி உள்ளது. எனக்கு எழுதி கொடுத்தது 51 குழி என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு சர்வே எண்.669/3 இல் எனக்கு எனது அப்பா எழுதி கொடுத்த 51 குழி போக மீதமுள்ள சொத்தில் எனக்கு எந்தவித சொத்தும் இல்லை என்றால் சரியல்ல.

5) தாவா சொத்தில் B ஷெட்யூல் சொத்தை அடைவதற்கான பொது பாதை என்று குறிப்பிட்டு வழக்குரையில் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வசதியுரிமை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அந்த இடத்தை குறிப்பிடுவதற்காக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) A ஷெட்யூல் தாவா சொத்தில் வேர்கடலை சாகுபடி செய்ததில் எந்தவித பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால் ஆகஸ்ட் 2018 இல் பிரச்சனை ஏற்பட்டது. அது சம்பந்தமாக போலிசில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு எழுதி கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தில் தான் பொது பாதை என்று குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், தவறாக எழுதியுள்ளார். பாதையின் அளவு 12 அடி அகலம், 80 அடி நீளம் என்று எதை வைத்து சொல்கிறேன் என்றால் நானாகவே சொல்கிறேன். பாதையின் அளவு 12 அடி அகலம், 80 அடி நீளம் என்று

எந்த பாதையும் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறனே் என்றால் சரியல்ல.

7) நான் வழக்குரையில் சொல்லியவாறு பொது பாதை என்றும் நான் குறிப்பிட்டுள்ள இடத்தில் இல்லை என்றும் , அவரவர் வயல் வழியாக தான் சென்று வரவேண்டும் என்றால் சரியல்ல. நான் தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.25 10:25:30 +0530

District Munsif

Mannargudi.